# 4

# ஈமானைப் பாதிக்கும் அம்சங்கள்

إِنَّ اللهَ لَا يَغْفِرُ أَنْ يُّشْرَكَ بِهٖ وَيَغْفِرُ مَا دُوْنَ ذٰلِكَ لِمَنْ يَّشَآءُ

''நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை வைப்பதை மன்னிக்கவே மாட்டான்;. இது அல்லாத (பாவத்)தைத் தான் நாடியவருக்கு மன்னிப்பான்...'' (4 அன் நிஸா :48)

ஒரு முஸ்லிம் ஈமானை மிகப்பெரும் அருளாகக் கருதுகிறான்; அவ்வருளை அடிப்படையாகக் கொண்டே அவனது வாழ்வை அமைத்துக் கொள்கிறான். அவ்வருளைப் பாதுகாக்க அவன் எதனையும் இழக்கத் தயங்குவதுமில்லை.

ஒரு முஸ்லிமிடம் உள்ள இத்தகைய பெருமதிப்பு வாய்ந்த ஈமானை அவன் பாதுகாத்துக் கொள்வதற்கு அதனைக் களங்கப்படுத்தும் அம்சங்கள் பற்றிய அறிவும் அவனுக்கு அவசியப்படுகிறது. அந்த வகையில் ஈமானைப் பாதிக்கும் சில அம்சங்கள் பற்றிக் கீழே விளக்கப்படுகிறது.

1. இல்ஹாத்
2. குப்ர்
3. ஷிர்க்
4. ரித்தத்

## இல்ஹாத்

இல்ஹாத் எனும் பதம் நாத்திகத்தைக் குறிக்கப் பயன்படுகிறது. உலகில் சமயங்களை ஒழிப்பதே நாத்திகத்தின் பிரதான இலக்காக அமைந்துள்ளது. இறைவன் இல்லை என நிராகரிக்கும் நாத்திகம் அதன் மூலம் இறை வழிகாட்டலை நிராகரிக்கிறது;

இறைத்தூதர்களை நிராகரிக்கிறது. நாத்திகப் போக்குக் கொண்டோர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்திலும் இருந்துள்ளனர் என்பதற்கு அல்குர்ஆன் சான்றாகும்.

**“மேலும் (மறுமையை நம்பாத) அவர்கள் ’’ நமது இந்த உலக வாழ்க்கையைத் தவிர வேறு வாழ்க்கை கிடையாது; நாம் இறக்கிறோம் ஜீவிக்கிறோம். காலம் தவிர வேறெதுவும் நம்மை அழிப்பதில்லை’’ என்று கூறுகிறார்கள். அவர்களுக்கு அதுபற்றிய அறிவு கிடையாது - அவர்கள் (இதுபற்றிக் கற்பனையாக) எண்ணுவதைத் தவிர வேறில்லை’’ (45 அல் ஜாஸியா :24)**

இறைவனையும் மறுமையையும் நிராகரிக்கின்ற சில மனிதர்கள் அச்சமூகத்தில் இருந்துள்ளனர் என்பதை இவ்வசனத்திலிருந்து புரிய முடிகிறது.

நாத்திகம் மனித இயல்புக்கு முரணானது. உலகில் எல்லாக் காலங்களிலும் மனிதர்கள் சமயத்தைப் பின்பற்றி வாழ்ந்துள்ளனர். மனித வரலாற்றில் சமயமில்லாத சமூகங்கள் இருந்ததில்லை என்ற வரலாற்று உண்மை இறை நம்பிக்கையுடன் வாழ்வதே மனித இயல்பு என்பதை உறுதி செய்கிறது.

நாத்திகம் மனித இயல்புக்கு மாத்திரமன்றி பகுத்தறிவுக்கும் முரணானதாகும். இறைவனை ஏற்று வாழும் மனிதர்களின் ஆதாரங்களுக்கு முன்னால் அவர்களால் ஈடுகொடுக்க முடியாது. மனித சமூகத்துக்கே அச்சுறுத்தலாக அமைந்துள்ள நாத்திகத்திலிருந்து உலகைக் காத்தல் மனித சமூகம் ஆற்ற வேண்டிய அவசரமான, அவசியமான ஒரு கடமையாகும்.

## குப்ர்

மொழியில் ‘‘குப்ர்’’ என்ற பதம் மறைத்தல், மூடுதல் போன்ற கருத்துக்களில் கையாளப்படுகிறது. இஸ்லாமிய வழக்கில் இஸ்லாத்தின் நம்பிக்கைகளையும் திட்டவட்டமாக அறியப்பட்ட அதன் செயன்முறைகளையும் நிராகரிப்பதைக் குறிக்க இப்பதம் பயன்படுகிறது.

**குப்ர் ஏற்படும் வழிமுறைகளை மூன்றாக வகுக்கலாம்:**

1) **நம்பிக்கை சார்ந்தவை:** அல்லாஹ்வை நம்பாதிருத்தல், நபிமார்களை நம்பாதிருத்தல், சுவனத்தையும் நரகத்தையும் நம்பாதிருத்தல், தொழுகை கடமை என நம்பாதிருத்தல் போன்றன இதற்கான சில உதாரணங்களாகும்.

2) **சொல் சார்ந்தவை:** அல்லாஹ்வைத் தூற்றுதல், நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைத் தூற்றுதல், மார்க்கக் கடமைகளைப் பரிகசித்தல் போன்றன இதற்கான சில உதாரணங்களாகும்.

3) **செயல் சார்ந்தவை:** இழிவுபடுத்தும் நோக்கில் அல்குர்ஆனைக் கிழித்தல் அல்லது அதனைக் குப்பைத்தொட்டியில் இடுதல் சிலைக்கு ஸுஜூத் செய்தல் போன்ற தொழிற்பாடுகளை உதாரணமாக இங்கு குறிப்பிடலாம்.

*குப்ரின் அபாயத்தை விளங்கிக்கொள்ள இரண்டு அல்குர்ஆன் வசனங்களை உதாரணமாகத் தருகிறோம்.*

‘‘எவர்கள் நிராகரித்து, நிராகரிக்கும் நிலையிலேயே இறந்தும்விட்டார்களோ, அவர்களில் எவனிடமேனும் பூமி நிறைய தங்கத்தைத் தன் மீட்சிக்கு ஈடாகக் கொடுத்தாலும் (அதனை) அவனிடமிருந்து ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது. அத்தகையோருக்கு நோவினைமிக்க வேதனை உண்டு. இன்னும் அவர்களுக்கு உதவி செய்வோர் எவரும் இருக்க மாட்டார்கள்.’’(3 ஆல இம்ரான் :91)

‘‘அன்றியும், எவர்கள் காஃபிராக இருக்கிறார்களோ, அவர்களுடைய செயல்கள் பாலைவனத்தில் (தோற்றமளிக்கும்) கானல்நீரைப் போலாகும். தாகித்தவன் அதைத் தண்ணீரென்றே எண்ணுகிறான் - (எதுவரையெனில்) அதற்கு (அருகில்) அவன் வரும்பொழுது ஒரு பொருளையும் (அங்கே) காணமாட்டானே (அதுவரை) ஆனால், அங்கு அவன் அல்லாஹ் (அவனுக்கு விதித்திருக்கும் முடி)வை(யே) காண்கின்றான். (அதன்படி அல்லாஹ்) அவன் கணக்கைத் தீர்க்கிறான். மேலும், அல்லாஹ் கணக்குத் தீர்ப்பதில் துரிதமானவன்.’’ (24 அன் நூர் :39)

*நற்செயல்களுக்கான நன்மையைத் தடுத்து நிரந்தர நரகத்திற்கு இட்டுச்செல்லும். குப்ரையிட்டு எப்போதும் எச்சரிக்கையாக இருந்து சுபீட்சமான வாழ்வுக்கு வழி யமைப்போம்.*

## ஷிர்க்

*மொழி வழக்கில் இணையாக்குதல், கூட்டுச்சேர்த்தல் போன்ற கருத்துக்களில் இப்பதம் கையாளப்படுகின்றது. இஸ்லாமிய வழக்கில் அல்லாஹ்வின் தெய்வீகத் தன்மையில் எவருக்கேனும் எச்சக்திக்கேனும் பங்குண்டு என நம்புதல் அல்லது அத்தகைய நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில் எச்செயலையினும் செய்தலே ஷிர்க் எனப்படுகிறது.*

*ஷிர்க் பிரதானமாக இரு பிரிவுகளாகப் பிரித்து நோக்கப்படுகின்றது.*

### *ஷிர்க்குல் அக்பர் (பெரிய ஷிர்க்):*

*அல்லாஹ்வுக்காக மாத்திரம் செய்யப்பட வேண்டிய கிரியைகளையும் வழிபாடு களையும் அல்லாஹ் அல்லாதவற்றுக்காகச் செய்தல் ஷிர்குல் அக்பர் எனப்படுகின்றது. வணங்குதல், பிரார்த்தித்தல், நேர்ச்சை வைத்தல் அறுத்துப் பலியிடல் போன்றன இங்கு உதாரணங்களாக குறிப்பிட த்தக்கவை. பெரிய ஷிர்க்கில் ஈடுபடும் ஒருவரது நற்செயல்கள் அவருக்குப் பயனளிக்கப் போவதில்லை.*

‘‘உமக்கும் உமக்கு முன் வாழ்ந்து சென்ற அனைத்து நபிமார்களுக்கும் இவ்வாறு வஹி அனுப்பப்பட்டுள்ளது. நீர் இறைவனுக்கு இணைவைத்தால், உம்முடைய செயல் வீணாகிப் போய்விடும். நீர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கு மட்டும் அடிபணிவீராக! மேலும் நன்றி செலுத்தும் அடியார்களுடன் ஆகிவிடுவீராக!’’ (அல் குர்ஆன்)

தவ்பா இன்றி மன்னிக்கப்படாத ஒரேயொரு பெரும் பாவமாக ஷிர்க் அமைந்துள்ளது.

**‘‘நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணை வைப்பதை மன்னிக்கவே மாட்டான்;. இது அல்லாத (பாவத்)தைத் தான் நாடியவருக்கு மன்னிப்பான்.’’ (4 அன் நிஸா :48)**

*ஷிர்க்குல் அஸ்கர் (சிறிய ஷிர்க்):*

பாவங்களில் பெரிய ஷிர்க்குக்கு அடுத்த இடத்தை வகிப்பது சிறிய ஷிர்க்தான். எனவே, இது பெரும் பாவங்களைப் போல மோசமானது என்பது மறுக்கப்படலாகாது. அல்லாஹ்வின் மீது பொய்ச் சத்தியம் செய்தல், வசியம் செய்தல், சாஸ்திரம் பார்த்தல் போன்றன இதற்கான சில உதாரணங்களாகும்.

அல்லாஹ்வை களங்கப்படுத்தும் ஷிர்க்கிலிருந்து விலகியிருப்பதே சுவனப் பாதையில் பயணிப்பவர்களுக்கு உரிய பண்பாக அமைந்திருக்கும்.

## ரித்தத்

மொழியில் ‘ரித்தத்’ என்ற சொல் பழைய நிலைக்கு மீளல், திரும்பிவிடுதல் பின்னோக்கிச் செல்லல் போன்ற கருத்துக்களில் கையாளப்படுகிறது. இஸ்லாமிய வழக்கில் ஒரு முஸ்லிம் தன்னைக் காபிராக்கக் கூடிய வார்த்தையை மொழிவதன் மூலம் அல்லது செயலைச் செய்வதன் மூலம் இஸ்லாத்தை விட்டு நீங்கி விடுவதைக் குறிக்க இப்பதம் கையாளப்படுகின்றது. சுருங்கக் கூறின், ஒரு முஸ்லிம் மதம் மாறுவதை ரித்தத் என்போம். இவ்வாறு மதம் மாறியவர் முர்தத் எனப்படுவார்.

முர்தத்துடன் முஸ்லிம் சமூகம் தமது தொடர்புகளை முழுமையாகத் துண்டித்துக் கொள்ளும். அவரது மனைவி அவரை விட்டும் பிரிந்து விடுவார். அவரது சொத்துக்கள் அவரது கடன்களை அடைக்கவும் குடும்பத்தைப் பராமரிக்கவும் பயன்படுத்தப்படும். அவரது சொத்து வாரிசுகளுக்கு வழங்கப்படமாட்டாது. அவர் உறவினர்களிடம் இருந்து வாரிசுச் சொத்தைப் பெறவும் அருகதை அற்றவர். தவ்பா செய்யாத நிலையில் இவர் மரணித்தால் இவருக்காக தொழுகை நடத்தப்பட மாட்டாது. முஸ்லிம் மையவாடியில் இவர் அடக்கம் செய்யப்படவும் மாட்டார். முஸ்லிம் சமூகம் இவரை ஒரு சமயத் துரோகி போன்றே நடத்தும்.

மனிதனின் ஈருலக வெற்றிக்கு கலப்பற்ற ஈமான் இருப்பது அவசியம். மனதில் அல்லாஹ் பற்றி ஏற்படும் சந்தேகங்கள் கூட ஈமானைப் பாதிக்கும் என்பதைக் கவனத்தில்கொள்ளல் வேண்டும். இஹ்லாஸான ஈமானுடன் வாழ்வை அமைத்து அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதே எமது வாழ்வின் இலக்காக அமைய வேண்டும்.

**பாடத்தில் இடம்பெற்றுள்ள அரபுச் சொற்கள்**

الإِلْحَادُ ۞ الكُفْرُ ۞ الشِرْكُ ۞ الرِدَّةُ ۞ الشِّرْكُ الأَكْبَرُ ۞ الشِّرْكُ الأَصْغَرُ

**பயிற்சி**

1. ஈமானைப் பாதிக்கும் அம்சங்கள் நான்கினைத் தருக.
2. ஷிர்க்கின் வகைகளை உதாரணங்களுடன் தருக.
3. குப்ரின் என்றால் என்ன? அதன் வகைகள் எவை?
4. முர்தத் என்றால் யார்? தௌபா செய்து மீளாத பட்சத்தில் அவர் எவ்வாறு நடத்தப்படுவார்?
5. இல்ஹாத் என்றால் என்ன? சுருக்கமாக விளக்குக.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக